# கல்விக்கதிர்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினது
உத்தியோகபூர்வ செய்தி மடல்

மலர் - 3

ஜூலை 2017

இதழ் - 2

மாகாணக் கல்வித் திணைக்களம்·வடக்கு மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව·උතුරු පළාත
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION
NORTHERN PROVINCE



மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

## மாற்று வலுவுள்ளோரின் மெய்வல்லுநர் போட்டிகள் – 2017














## தென்மாகாண நட்புறவு





# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்

**தொலைநோக்கு**

*'வட மாகாணத்தின் அனைத்து சிறார்களுக்கும் எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ளக் கூடிய தரமான உன்னதமான கல்வி.*

**பணிக்கூற்று**

*"தரமான வாழ்க்கைப்பாங்குடன் வாழ்வதற்கான அறிவுமிக்க ஆளுமையுடைய சமுதாயம் உருவாக வழிப்படுத்தல்"*

# கல்விக்கதிர்

மலர் 3 இதழ் 2 ஜூலை 2017

**மேற்பார்வையும் வழிகாட்டலும்**
**செ.உதயகுமார்**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்

**ஆலோசனைக்குழு**
**திரு.கே.பிரேமகாந்தன்**
மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்

**திருமதி. பி. செல்வின் இரேனியஸ்**
மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்

**திரு.ஜெனாட் பிரெட்லி**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.கே.சத்தியபாலன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.க.மணிமாரன்**
பிரதிக்கல்விப் பாணிப்பாளர்

**இதழாசிரியர்**
**திரு.சு.சற்குணராஜா**
பிரதிக்கல்விப்பாணிப்பாளர்

**தொடர்புகளுக்கு :-**
**தொலைபேசி** - 021 224 2807
**தொலைநகல்** - 021 224 1383
**மின்அஞ்சல்** - kalvikathirnorth@gmail.com
**குறுந்தகவல்** - 0094 703 555 666
**முகநூல்** - Provincial Department of Education Northern Province



## முன்னோக்கிய பயணம்....

இந்த ஆண்டின் இரண்டாவது கல்விக் கதிர் இதழினூடாக கல்விப்புலத்தில் உள்ளோரைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. இவ்விதழ் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் சிறப்பு மலராக வெளிவருகின்றது. அந்த வகையில் மாகாண மட்ட தடகளப் போட்டிகள், விசேட தேவையுடைய மாணவர்களின் மெய்வல்லுனர் திறனாய்வு, மாகாணமட்ட, தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. இவை மிகவும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளில் வடக்கு மாகாண மாணவர்களின் பல்வேறு திறமைகள் வெளிப்படுத் தப்பட்டுள்ளன.



தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் 22 முதலிடங்கள் எமது மாகாணத்திற்கே கிடைத்துள்ளன. அதேபோல் தடகளப்போட்டியிலும் சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. கல்வியிலும் முன்னோக்கிச் செல்லத் தொடங்கியுள்ளோம்.

க.பொ.த. உயர்தரம், புலமைப் பரிசில் பரீட்சைக்கு அடுத்தபடியாக க.பொ.த. சாதாரண தரத்திலும் நாம் சிறிய அதிகரிப்பைக் காட்டியுள்ளோம். தென்பகுதியில் நடந்த சந்திப்பில் வடக்கு முன்னோக்கி செல்லத் தொடங்கி விட்டது என்று அவர்கள் வாயால் கேட்டது மகிழ்ச்சியைத் தரும் ஒன்றாக அமைந்தது. எமது தென்மாகாண நட்புறவு நிகழ்வின் போது அங்கு முதன்மை நிலை இரண்டிற்கு மாணவர்கள் வரும்போது எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் எவருமில்லை என்று எமக்குக் கருத்துத் தெரிவிக்கப் பட்டது. ஆனால் இங்கோ 25 வீத மாணவர்கள் எழுத்து வாசிப்பில் இடர்படுகிறவர்களாக இருப்பதே எமது முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது. எனவே இதனை நிவர்த்தி செய்தல் எமது முன்னேற்றத்திற்கு மிக மிக அவசியம். இதற்கான செயற்பாடுகளை மாகாணக் கல்வித் திணைக்களம் தற்போது முன்னெடுத்து வருகின்றது. தற்போது தரம் 1, தரம் 2 (முதன்மைநிலை I) மாணவர்களின் அடைவை மேம்படுத்த பல்மட்டக் கற்பித்தல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 164 பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு கற்பிக்கும் தரம் - 2 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் மாணவர் எண்ணிக்கை கூடியனவாகவும் பெறுபேற்றில் வீழ்ச்சி காணப்படும் பாடசாலைகளுமாகும்.

இப்பாடசாலைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே ஆரம்ப வகுப்புக்களில் முன்னேற்றத்தைக் காண முடியும். அதேபோல் இடைநிலைக் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஆசிரியர் சந்திப்புக்கள் கையேடுகள் தயாரிப்பு போன்றவையும் நடைபெற்று வருகின்றன.

இச் செயற்பாடுகள் எமது வடக்கு மாணவர்களின் அடைவில் மாற்றத்தை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்பது எமது நம்பிக்கை, முயல்வோம், முன்னேறுவோம், வெற்றி பெறுவோம்.

இதழாசிரியர்
A.S. சற்குணராஜா
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

**இடமாற்றம்**

எமது மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பிரதம கணக்காளராக இருந்து மாகாணக் கல்வித் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருந்து பல வழிகளிலும் சிறப்பான சேவை புரிந்த திரு.N.S.R சிவரூபன் அவர்கள் ஆகஸ்ட் 1 இலிருந்து மாகாணக் கல்வி அமைச்சிற்கு இடமாற்றம் பெற்றுக்பெற்றுள்ளார். அங்கு அவரின் சேவை சிறக்க மாகாணக் கல்வித் திணைக்களம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**நியமனம்**

அவரின் இடத்திற்கு திருமதி.குமுதினி நிரஞ்சன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். மாகாணக் கல்வித் திணைக்களம் அவரை வாழ்த்தி வரவேற்கின்றது.

# செயற்பாட்டறை, வாசிப்பு அறை, மற்றும் வகுப்பறைகள் கொண்ட ஆரம்பக்கல்வி கற்றல் வளநிலையம்

2016 வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளுக்கு அமைவாக அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவில் செயற்பாட்டறை, வாசிப்பு அறை மற்றும் வகுப்பறைகள் கொண்ட ஆரம்பக்கல்வி கற்றல் வள நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. செயற்பாட்டறை மற்றும் வாசிப்பு அறைகளைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆலோசனை வழிகாட்டியொன்றைத் தயாரிப்பது தொடர்பான வேலைத்திட்டம் 2017 இல் கல்வியமைச்சினால் ஒழுங்க மைப்பட்டது. முதற்கட்டமாக சிங்கள, தமிழ்மொழி மூலமான வளவாளர்களும் அடுத்த கட்டமாக தமிழ் மொழி மூலமான வளவாளர்களும் இவ் வேலைத்திட்டத்தில் பங்குபற்றினர்.

இலங்கையில் 3574 ஆரம்பக் கல்வித் தனிப்பாடசாலைகள் காணப்படுகின்றன. 514 ஆரம்பக்கல்வி தனிப் பாடசாலைகளில் செயற்பாட்டறைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. ஒரு கட்டிடம் ஆறு வகுப்பறைகள் கொண்ட இரு தட்டுக்களாக (மாடி) இருக்கும். கீழே மூன்று அறைத்தொகுதிகளும் மேலே மூன்று அறைத்தொகுதிகளும் அமைக்கப்பட்டிருக்கும். கீழ்த் தட்டறைகளில் ஒன்று செயற்பாட்டறை. மற்றையது வாசிப்பு அறை, மூன்றாவது அதிபர் அலுவலகமாகப் பயன்படுத்த முடியும்.

### செயற்பாட்டறையில் காணப்படுவன

பல்லூடாக எறியி, கணிணி, பச்சைப் பலகை 02, பிளானல் பலகை 02, வெள்ளைப்பலகை 01 ஆகியன வாகும். பாயிலிருந்து செயற்பாடுகள் இடம்பெற வேண்டும். கதிரை மேசைகளால் செயற்பாட்டறையை நிரப்பக் கூடாது. பல்லூடகம் கணிணி வைப்பதற்கு மட்டும் பயன்படுத்த முடியும்.

செயற்பாட்டறைக்கு உட்கட்டமைப்பு வசதிகளுடன் பௌதிக வளங்களும் மனித வளங்களும் இணைத்துக் காணப்படும். வெளி நாடுகளில் வேலை நிலையம் (Work Station) என அழைக் கப்படுகின்றது. இலங்கையில் ஆரம்பக் கல்வியில் செயற்பாட்டறையை கற்றல் வள நிலையம் என அழைக்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் இரசாயனம் மற்றும் விளையாட்டு உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் செயற் பாட்டறை இல்லை. முன் பிள்ளை விருத்தியில் நியதிகள் உள்ளன. சில மாகாணங்களில் வரையறை கிடையாது. ஆரம்பக்கல்வியின் வரையறைக்குள் நின்று செயற்பாட்டறைகளைத் திட்டமிட வேண்டும்.

### செயற்பாட்டறையில் எதிர்பார்க்கப்படுபவை

- கற்றல் பேறுகளைக் கூறுகளாக்கி செயற்பாடுகள் செய்தல். செவிமடுத்தலுக்கு இடமில்லை. வெளியிலும் செய்யலாம். இங்கு செயற்பாடுகள் மட்டும்தான்.
- செயற்பாடுகள் பல்வேறு விடயங்களாயும், பல்வேறு மட்டங்களாயும் இருக்க வேண்டும்.
- கை நூலில் எதிர்பார்க்கின்ற கற்றற் பேறுகள் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் அடையப்பட்டிருக்க வேண்டும்.
- சகல மட்டங்களிலும் இருக்கும் பிள்ளைகளுக்கு கற்றல் சந்தர்ப் பங்கள் கிடைக்க வேண்டும்.

ORIGINAL SEEN
CERTIFIED TRUE COPY

- இலகுவிலிருந்து விரிவடைந்து செல்லும் வகையில் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும்.
- எந்தெந்த திட்டமிடலுக்கும் சகல உபகரணங்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- சகல செயற்பாடுகளிலும் மகிழ்ச்சியான கற்றற் சந்தர்பங்கள் காணப்பட வேண்டும்.
- தாய்மொழி, கணிதம் இரு பாடங்களுக்கும் தாய்மொழியுடன் செயற்பாடுகள் இணைந்ததாக திட்டமிட வேண்டும்.
- கைநூலில் ஆசிரியருக்குரிய மனப்பாங்குகளும் இடம்பெற்றிருக்கும்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ள தேர்ச்சிகளுக்கு மேலும் போசணையூட்டக் கூடிய விடயங்கள் அமைய வேண்டும்.
- தனியான குழுவான செயற்பாடுகளுக்கான விடயங்கள் திட்டமிடப்பட்டிருக்கும்.
- இலகுவான, எளிமையான கைநூலாக அமைய வேண்டும். பயிற்சி பெறாத ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் உள்ளனர்.
- பிள்ளை எதிர்பார்க்கின்ற செயற்பாடுகளும் இடம்பெறும்.
- பிள்ளைகளின் உள்ளாந்த திறன்களையும் அறியக்கூடிய செயற்பாடுகள் இடம்பெறும்.
- ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் பின்னிணைப்புக்கள் இடம்பெறும்.
- செயற்பாட்டறைகளை தொழில் நுட்பங்களுடன் கூடியது. வகுப்பறைக்கு வெளியே செல்வதை விடுத்து செயற்பாட்டறைகளை மேலும் ஒரு விடயமாக மேம்பாடடையச் செய்ய வேண்டும்.
- காட்சிகளுடன் கூடிய புத்தாகத்தை ஆக்குதல்.
- அழியும் பொருளாயினும், பழுதான பொருளாயினும் இற்றைப்படுத்துதல் வேண்டும்.
- கைநூலிலுள்ள கணித பாடத்திற்கான வளங்களும் இருக்கும்.
- பாடத்திட்டத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.
- மூன்று முதன்மை நிலைகளிலும் செயற்பாடுகள் அமையும். பல் மட்டப் பிள்ளைகளும் செயற்படுவார்கள். நேர சூசியொன்றும் திட்டமிடப்பட்டிருக்கும்.

சு.சிவபாலன்
ஆசிரிய ஆலோசகர்,
(கிளிநொச்சி கல்வி வலயம்)



# ஆரம்ப வகுப்பு விஞ்ஞானத்தின் கற்றல் செய்முறை இடைநிலை வகுப்பு விஞ்ஞானக்கற்றலின் ஆர்வத்தை ஏற்படுத்தும்

தற்போதைய காலகட்டத்தில் இடை நிலை வகுப்புக்களில் விஞ்ஞான பாடத் தின் அடைவுமட்டம் நலிவடைந்து வரு வதை அவதானிக்க முடிகிறது.

இதன் தாக்கம் க.பொ.த.சாதரண தர, உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஆரோக்கியமற்ற தன்மையை உறுதிப் படுத்துகின்றன. பெறுபேறுகளின் நிச்ச யார்த்த தன்மையை நிலைநிறுத்த பாடசாலை, கோட்டம், வலயம் என்ற மட்டத்தில் உசுப்பேற்றல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

எனவே, இச்செயற்பாட்டில் பதினோ ராம் ஆண்டில் மாரடிப்பதை விட ஆரம்ப வகுப்புக்களிலேயே விஞ்ஞான பாடத் தில் ஊக்கம் மேற்கொள்வது சாலப் பொருத்தமானது.

கசப்பான மருந்தை இனிப்பான பிஸ்கட்டுடன் சேர்த்து குழந்தைகளுக் குக் கொடுத்து இலக்கை எட்டுவது போல விஞ்ஞானக் கல்வியையும் ஆரம்ப வகுப்புக்களில் விருப்புடன் புகட்டுவது பொருத்தமானதாக அமைய லாம்.

கற்றல் பெறுபேற்றில் மாற்றத்தை ஏற்படுத்தவும் விஞ்ஞானக் கல்வியில் ஆர்வத்தைத் தூண்டவும் கல்விப்புலம் சார்ந்தவர்களின் ஆதரவும் அரவணைப் பும் வேண்டற்பாலது.

எனவே, ஆரம்ப வகுப்புக்களில் விஞ்ஞானக் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு மிகமிக கச்சிதமானதாகக் கருதப்படுகின்றது.

ஆனால், ஆரம்பக்கல்வி ஆசிரிய ராக நியமனம் பெற்ற பலர் விஞ்ஞான ஆசிரியர்களாகப் பயிற்சி பெற்று தமது வாண்மையை உயர்த்திய பின்னர் ஆரம்ப வகுப்புக்களில் கற்பிப்பதை அங்கீகரிப்பதில்லை.

மாறாக வாண்மையின் அடுத்த நிலையில் விஞ்ஞானமாணியாக நிலை மாற்றம் பெறுவதற்குப் பதிலாக கலைப் பட்டதாரியாக மாறுகின்றனர்.

வாண்மை விருத்தி மகிழ்ச்சிக்குரி யது, வரவேற்கத்தக்கது. ஆனால் விஞ்ஞானப் பயிற்சி பெற்றதும் ஆரம்ப வகுப்புக்களில் கற்பிப்பது இவர்களுக்கு அருவருப்பாக இருந்தபோதும், கலைப் பட்டதாரி ஆகிய பின்னர் கலைப்பிரிவு களுக்கான பாடங்களைக் கற்பிக்க மறுப்பது கவலைக்குரியதாகவுள்ளது.

இதைவிடுத்து உள்ளக முரண்பாடு கள், உணர்வுகள், உணர்ச்சிகளுக்கப் பால் செயற்பட வேண்டியது பாடசாலை யின் முக்கிய கடமையாகும்.

### செய்முறைக் கல்வியின் முக்கியத்துவம்

ஆரம்ப வகுப்புக்களில் விஞ்ஞானம், சுற்றாடல் ஆகிய பாடங்களைக் கற்பிக் கும் போது இம் மாணவர்களுக்குப் பொருத்தமான செயன்முறைவேலையை (Practical Work) நடைமுறைப்படுத்து வதில் ஆசிரியர் முனைப்பாகச் செயற் பட வேண்டும்.

இதற்கு பொருத்தமான வாய்ப்புக் களைக் கல்விப்புலம் தயார்படுத்த வேண்டும்.

இவ்வாறாகக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வகுப்பறைகளில் நடைபெறுகின்ற போது மாணவர்கள் விருப்பத்துடன் கற்றலில் ஈடுபட முனைவர்.

இதனால் கற்பித்தல் கம்பீரமாகவும் வெற்றிகரமாகவும் அமைவதுடன் விஞ்ஞான பாடத்தைக் கற்பதில் மகிழ்ச்சியடைவதுடன் அவர்களுக்கு கற்பித்தலும் ஒரு வெறுப்பூட்டும் விடயமாக இராது.

தொடர்ந்தும் விஞ்ஞானம் கற்பதில் ஆர்வத்தை ஆக்கபூர்வமாகவும் அனுபவ மூலமாகவும் ஏற்படுத்தலாம் என நம்பப்படுகின்றது.

பொதுவாக நோக்குமிடத்து சிறார்கள் தொட்டுணர்ந்து நேரடி அனுபவத்தின் ஊடாக வாய்ப்பைப் பயன்படுத்தி இலக்கை அடைவதிலும் ஆர்வமாக இருப்பார்கள். தமது சூழலின் புதியதோர் நிகழ்வு நடைபெறும் போது அவர்களிடையேயும் பிரமிப்பும் மகிழ்ச்சியும் உச்சநிலையில் இருக்கின்றமை சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல. எனவே, இவ்வாறாகக் கற்பித்தலை வெற்றிகரமாகச் செயற்படுத்தப் பாடசாலைகளில் விருப்பத்துடன் முன்வர வேண்டும்.

சிறார்கள் என்றும் புதிய விடயங்களைப் பார்ப்பதில் ஆர்வமாக இருப்பர். இயலாமை என்ற நிலையிலிருந் தும் இயலும் என்ற நிலைக்கு உந்தப்படுவது இவற்றை மையப்படுத்தி வேறு விடயங்களை அறிவதற்கான தேவை இவர்களிடம் தானாகவே ஏற்படும்.

## விஞ்ஞான எண்ணக்கருவும் செய்முறையும்

ஆசிரியர்கள், மாணவர்களுக்கிடையில் ஒட்டுறவாடி செயற்பாடுகளின் ஊடாக சிறார்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய உபகரணங்களுடன் கற்பித்தலில் ஈடுபடும் போதும் அவற்றை இயக்கிக்காட்டி மாணவருடன் இணைந்து செயற்படும் போது கற்றல், கற்பித்தல் செயற்பாடு வெற்றிகரமாக அமையும் ஆக, எம்மால் கூறப்படும் கூற்றுக்களையும் செய்கைகளையும் மாணவர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்த மாட்டாது.

எளிய கையாளக்கூடிய உபகரணங்களைப் பயன்படுத்தி செய்துறை நுட்பத்தை பயன்படுத்தும் போது மாணவர்கள் பலவகையான புதுவிடயங்களை அறிந்து கொள்வர். இச் செயற்பாட்டில் வழிகாட்டல் மிக மிக அவசியமானது.

ஆசிரியர்கள், மாணவர்களுடன் அல்லது வளவாளர்களுடன் கூட்டாக இணைந்து புதிய விடயங்களை இனங்காண்பதற்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அவர்களை தற்காலத்தில் பயன்படுத்த வேண்டும்.

மதிநுட்பம் மிக்க செயற்றிறன் மிக்க ஓர் ஆசிரியர் மாணவர்களின் பிரச்சினைகளுக்கு அல்லது சந்தேகங்களுக்கு கர்ச்சிதமாகவும் மாணவனுக்கு சுவைபடத்தக்க வகையிலும் விடையளிக்கும் போது அவனது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவனு க்கு உதவ முடியும்.

இச் செயற்பாடு அவனது கற்றலுக்குப் படிக்கல்லாக அமையும். எனவே, இச்செயல் ஒழுங்கைப் பின்பற்றுவது வரவேற்கத்தக்கது.

உதாரணமாக, தரம் நான்கு மாணவர் குழுவொன்று ஆசிரியரின் வழிகாட்டலுடன் நீர்ச்சில்லு ஒன்றை அமைத்தது. குழுவைச் சேர்ந்த ஒரு மாணவன் அதனை இயக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டான். சில்லில் நீரை ஊற்றிக் கொண்டிருந்தான். அச்சில் ஊற்றும்

போது செயற்பாடு நடைபெறவில்லை. சில்லில் நீர் ஊற்றப்பட்டதும் உண்மை. சில்லு இயங்காமல் இருந்ததும் உண்மை. இவ்விடத்தில் பிள்ளையின் எதிர்பார்ப்பு நிறைவேறாதவிடத்து பிள்ளை தோல்வியடையும் நிலைக்குத் தள்ளப்படும்.

இவ் வேளையில் நம்பகத் தன்மையை வலுவூட்ட வேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவே, குழுவினரின் சிந்தனைக்கு தீங்கு ஏற்படாதவாறு நீரை நாங்கள் சற்றுத்தள்ளி வேறொரிடத்தில் ஊற்றி பார்ப்போம் என முயற்சிக்கும் போது நீர்ச்சில்லு அசையத் தொடங்கலாம் என ஆலோசனை கூறலாம், வழிகாட்டலாம், அல்லது செய்து காட்டலாம். அவ்வாறு அச்சில்லின் மீது நீரையூற்றியதும் அது அசையத் தொடங்கும். இந்நிகழ்வு பிள்ளைகளின் முயற்சிக்கு வெற்றியாக அமையும் போது செயற்பாட்டு எண்ணக்கருவிலே மாற்றத்தை ஏற்படுத்தும், நம்பிக்கையை ஏற்படுத்தும்.

**அளத்தலில் ஆர்வத்தை ஏற்படுத்தல்**

விஞ்ஞான செயன்முறைக் கற்றலில் அளத்தல், அளவிடுதல் என்பன மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிடும் போதும் அல்லது ஒன்றை ஒன்றுடன் ஒப்பிடும் போதோ அல்லது பரிசோதனையை திட்டமிடும் போதோ அளத்தலும் அளவிடுதலும் மிக முக்கிய விடயத்தை வகிக்கின்றது. விசை அளத்தலுக்கு மிகச் சிறந்த உதாரணமாகும். பிரயோகச் செயற்பாடுகளினால் ஆரம்பம் எதுவும் ஏற்படாது. பெரும்பாலான செயற்பாடுகள் போன்று இயங்கும் ஏதாவது ஒன்றை அறிந்து கொள்வதற்குள்ள ஆர்வமே ஆரம்பமாக அமைகின்றது. பொருள் ஒன்றைத் தொட்டுப் பார்ப்பதாலோ பிரிப்பதாலோ அப்பொருளைப் பற்றிய எண்ணம் ஒன்றை, உணர்வொன்றைப் பெற்று ஆர்வத்தை தூண்டப் பெறுவர். விஞ்ஞானம் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.

சாதாரணமாக பூவின் வெவ்வேறு பாகங்கள் பற்றியும் தாவரங்களின் வெவ்வேறு பாகங்கள் பற்றியும் கலந்துரையாடி உண்மைப் பொருட்களுடன் பரிசோதனை செய்கின்ற போது மாணவர்களிடையே உயிரியல் கற்பதற்கான வாய்ப்பையும் ஆர்வத்தையும் வரவழைக்க முடியும். மாணவரிடம் காந்தம் ஒன்றை வழங்கி வேறொரு காந்தம், இரும்பு, ஆணிகள் என்பவை கவரப்படுவதை உணர்த்தலாம்.

இவை எளிய பரிசோதனையாகவும் அவதானிப்பாகவும் இருந்த போதும் அவனை அறியாமலே கடினமான பல வினாக்களை அவனிடையே ஏற்படுத்தும். அதன்போது ஏன் அவ்வாறு நடைபெற்றது என்ற வினாவை அவன் முன்வைக்கக்கூடும்.

அதன்போது குழப்பமடையாமல் நானும் ஏன் அப்படி நடைபெற்றது என்று தான் சிந்திக்கின்றேன் எனக் கூறுதல் வேண்டும்.

விஞ்ஞானம் கற்கும் போது அவதானத்துடன் இருக்க வேண்டியது காலத்தின் போதையாகும்.

காந்தத்தை மையப்படுத்தி இதனால் எல்லாப் பொருட்களையும் கவர முடியுமா என்ற சிறு வினாக்களை வினாவலாம். இதற்காக சில உலோகமல்லாத பொருட்கள் இறப்பர், பிளாஸ்ரிக்கிலான பொருட்கள் என்பவற்றை வழங்கலாம். இதைவிட மின்கலங்கள், மின்குமிழ், மின்கடத்தி என்பவற்றை வழங்கி மின்குமிழை ஒளிரச் செய்யும் முறை பற்றியும் மின்ஆழிகளூடாக ஒளிரச் செய்யும் வகை என்பவற்றை நேரடி

அனுபவத்தினூடாக ஏற்படுத்தலாம். இத னூடாக பௌதீகம், இரசாயனம் என்ப வற்றைக் கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத் தலாம்.

விளையாட்டு தராசில், சுற்றாடலில் பாவிக்க முடியாத பொருட்களில் வாத்தி யக் கருவிகள் தயாரித்தல். இதுபோன்ற திட்டமிட்ட வகையிலான இன்னும் பல செயற்பாடுகள் மேற்கொள்ளும் போது அவை ஆரம்ப மாணவர்களிடையே விஞ்ஞானக் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத் தும்.

மாணவர்களை செயன்முறை வேலையில் ஈடுபடுத்தும் போது தொட்டு ணரக் கூடியதிலிருந்தும் மகிழ்ச்சிகரமான திலிருந்தும் செயற்பட வைத்தல் வேண்டும்.

அதன்போது புலனுறுப்புக்களின் பங்களிப்பு தேவையானது. இதற்காக உபயோகிக்கும் பொருட்கள் இறப்பர் நாடா, பிளாஸ்ரிக் பொருட்கள் சார்ந்த சாதாரண பொருட்களாயின் பரிசோத னைகளை அவர்கள் வீட்டிலும் செய்து பார்க்க முடியும்.

அளந்து பார்ப்பதற்கும் கணக்கிட்டு பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கவும் ஒன்று நடைபெறும் விதத்தை பிழை யின்றி விபரிக்கும் ஆற்றலைப் பெறுவ தற்கும் இப் பண்பு முக்கியமானதாகும். ஒருவர் தோல்வியின் மூலம் கற்றுக் கொள்கிறார் என்பதையும் வாழ்க்கை யில் ஆரம்பக் கட்டங்களில் கற்றுக் கொள்பவை ஒருவரது மனதில் நெடு நாள் நிலவும் என்பதையும் எடுத்துரை த்தல் மிகவும் முக்கியமானதாகும்.

மு.விக்னேஸ்வரன் (SLPS I)
பரீட்சை அலகு
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

## *School Inventors Competition - 2016*



*Udayaruban Lathusorban*
*1st Place (National Level)*
*J/Hartley College, Point Pedro.*



*S.Thanusha*
*2nd Place*
*(National Level)*
*J/Uduppidi Girls College*



*T.Mathusika*
*2nd Place*
*(National Level)*
*J/Uduppidi Girls College*

# சிறிய பாடசாலைகளின் அபிவிருத்தித் தேவைகள்

இலங்கையில் இன்று ஏறக்குறைய 10000க்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்குகின்றன. எனினும் எல்லாப் பாட சாலைகளும் சம அளவான பௌதிக வளங்களோ, ஆசிரிய ஆளணியினரோ, மாணவர் தொகையோ கொண்டமை யாது பல வழிகளிலும் வேறுபட்டவை யாகவே காணப்படுகின்றன. கல்வியை வழங்குவதிலும், எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களிலும்கூட வித்தியாசப்படுகின் றன. இயங்கும் 10000க்கு மேற்பட்ட பாடசாலைகளில் ¼ பங்கு அல்லது 25% ஆனவை சிறிய பாடசாலைகளாகவே காணப்படுகின்றன. இப் பாடசாலை களில் 100க்குக் குறைவான மாணவர் களும், 1 தொடக்கம் 3,4 ஆசிரியர்களும் காணப்படுவதாக பாடசாலைத் தொகை மதிப்பீட்டுப் புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இச் சிறிய பாடசாலைகள் கிராமப் புறங்களிலும், நகரத்திலிருந்து மிகத் தூரமான பிரதேசங்களிலும் பின்தங்கிய பிரதேசங்களிலும், பின்தங்கிய பிரதேசங் களிலுமே அதிகம் காணப்படுகின்றன. இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப் பட்ட பிரதேசங்களிலும் இத்தகைய பாடசாலைகள் உண்டு.

**இனம் காணப்பட்ட பிரச்சினைகள் :-**

- குடிநீர் வசதி இன்மை.
- அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமை.
- கட்புல, செவிப்புல சாதனங்களின் பற்றாக்குறை.
- விளையாட்டு மைதானம் இல் லாமை.
- நூல் நிலையம் அமைக்கப்படாமை.
- மின்சார வசதி செய்யப்படாமை.
- பெற்றோரின் வறுமை.
- மீன்பிடி, கூலி வேலை, விவசாயம் செய்யும் பெற்றோர்.
- மாணவர்களின் இடைவிலகல்.
- பாடசாலைக்கு உரிய வயதில் சேர்த் துக் கொள்ளப்படாமை.
- உரிய ஆசிரிய ஆளணியினர் நியமிக்கப்படாமை.
- ஆசிரிய தர வாண்மை காணப்ப டாமை.
- எழுத, வாசிக்கத் தெரியாமை.
- அழுக்கான உடைகளுடன் பாடசா லைகளுக்கு மாணவர்கள் வருதல்.

என பலவற்றை இனம் காண முடியும்.

இச்சில பாடசாலைகளில் இனம் காணப்பட்ட பிரச்சனைகளால் இப் பாடசாலைகளை மூடி விட முடியாது. ஏனெனில் பின்தங்கிய பிரதேசங்களில் கல்வி வழங்கும் ஒரு நிறுவனமாக இவைகளே விளங்குகின்றன. இத்த கைய பாடசாலைகளிடம் கல்விப் பெறு பேறுகளும், இலவச பாடவிதான செயற் பாடுகளிலும் ஏனைய பாடசாலைகளை விடக் குறைவான வையாகவே காணப் படுகின்றன. அரச ஊழியர் அல்லது வசதி கூடிய ஒரு சிலரின் பிள்ளைகள் நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி கற் கின்றனர். இத்தகைய சிறிய பாடசாலை களை ஒழித்து விடாமல் ஏனைய நகர்ப் புறப் பாடசாலைகள் போன்று வசதி, வாய்ப்புகளையும் உதவிகளையும் வழங்கி ஏனைய பாடசாலைகளின் நிலை க்கு உயர்த்துதல் வேண்டும்.

**அபிவிருத்தித் தேவைகளை இனம் காணல் :**

1000 மூலாதாரப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் 5000 ஊட்டப் பாடசாலைகளை இனங் கண்டு அவற்றிற்கான அடிப்படைத் தேவைகளை இனம் காணல் வேண்டும்.

- மலசலகூடம் அமைத்தல்.
- நூலகம் அல்லது தொண்டு நூலகங் களை ஏற்படுத்துதல் (பாவிக்கப்ப டாத வகுப்பறைகள் இதற்குப் பயன்படுத்தலாம்)

- போதியளவு குடிநீர் வசதி, கழுவும் நீர் ஆகியவற்றிற்கான திட்டமிடல்.
- கட்புல, செவிப்புல சாதனங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங் களை வழங்குதல்.

  பெற்றுக்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்தல்.
- விளையாட்டு முற்றம் அமைத்தல்
- மின்சார வசதி அல்லது தற்காலிக மின்பிறப்பாக்கிகளை வழங்குதல்.
- பெற்றோருக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தல்.
- அயலில் உள்ள பாடசாலைக்குச் சேரும் வயதுள்ள மாணவர் விபரங் களை சேகரித்து வழிகாட்டல்.
- தரமான உள்ளீடுகளை கொள் வனவு செய்வதற்கான நிதியினை அதிகரித்தல்.
- TB HOP. SB HOP ஆகியவற்றை வழங்க கோட்டம், வலயம்,மாகாணம் ஆகியன தமது ஆளணியினரை துரிதப்படுத்துதல், மேற்பார்வை செய்தல்.
- இலவச பாட நூல்களை உரிய காலத்தில் கிடைக்கச் செய்தல்.
- தேவையான ஆசிரிய ஆளணியி னரை வழங்குதல் - பயிற்சி அளித் தல்.
- ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு ஆசிரி யர் என்பதை உறுதிப்படுத்தும்.
- ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர்களை நியமனம் செய்தல்.
- பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.
- கல்விமாணி, மற்றும் பட்டங்களைப் பெறவும் கல்வி டிப்ளோமா போன்ற தொழிற் தகமைகளையும் அதிகரிக்க வழிகாட்டல்.
- பாடத்திட்டம், பாடவிரிவாக்கம் பொருத்தமான உபகரணங்களைக் கண்டுபிடித்தல், ஆசிரிய மட்டச் செயற்பாடுகளுக்கு வழிகாட்டல்.
- மேற்பார்வை உத்தியோகத்தர்கள் நேரடியாக பாடசாலைகளைத் தரி சித்து நேர்மனப்பாங்குடன் வழிகாட் டல்.

மேற்காட்டிய அபிவிருத்தித் திட்டங் களை இனம்கண்டு திட்டமிடல் மூலம் ஒழுங்கமைத்து கண்காணிப்பு நடவடிக் கைகளை மேற்கொண்டால் சிறிய பாடசாலைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதுடன் அதன் தரத்தையும் மேம்பாடடையச் செய்யும்.

**செல்வி. சாயித்ரா சரவணபவானந்தன்**
**ஆசிரியை,**
**மாங்குளம் மகா வித்தியாலயம்,**
**மாங்குளம்.**

## தென்மாகாண நட்புறவு

08.06.2017 அன்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து மாகாணக் கல்விப் பணிப்பாளர் பிரதம கணக்காளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், 50 சாரணர்கள் அடங்கிய குழுவினர், தென்மாகாணத்திற்கு விஜயம் செய்தனர். அங்கு மழை வெள்ளத்தால் சேதமடைந்த மாப்பலாகம என்னும் இடத்திலுள்ள 3 பாடசாலைகளில் தமது சேவையினை வழங்கினர். அதன்பின் அக்மீமன மகளிர் பாடசாலை, காலி கல்வி வலயம், தென்மாகாணக் கல்வித் திணைக்களம் போன்றவற்றிற்கு சென்று அங்கு நடைபெறும் செயற்பாடுகளை அவதானித்து அங்குள்ள அதிகாரிகள் முதலமைச்சர், முன்னாள் ஜனாதிபதி திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோருடன் உரையாடி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

# கல்விப்புலத்தில் ஆய்வுகளின் அவசியம்

"ஆய்வு" என்ற சொல் இன்று பலராலும் பல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். இருப்பினும் பட்டங்களைப் பெறுவதை மட்டுமே இலக்காகக் கொண்டே இன்று வடபுலத்தில் பெரும்பாலான ஆய்வுகள் நடைபெறுகின்றனவே தவிர ஆய்வு என்பது அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்தப்படுகின்றதா என்று நோக்குகின்ற போது மிகச் சிறிய அளவிலேயே இதன் பயன்பாடு கல்விப்புலத்தில் உள்ளமையைக் காண முடிகின்றது.

பொதுவாக துறை சார்ந்த நிபுணர்கள் கொள்கை வகுப்பாளர்கள், திட்ட வகுப்பாளர்கள், தீர்மானங்களை மேற்கொள்ளும் போது 2 வகைகளின் கீழ் தீர்மானங்கள் மேற்கொள்வதைக் காணலாம்.

1. அறிவு சார்ந்த தீர்மானம் மேற்கொள்ளல்
2. எழுந்தமானமான தீர்மானம் மேற்கொள்ளல்

அறிவு சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளல் ஆனது குறித்த துறை சார்ந்த கொள்கைகள், தொடர்பான புத்தகங்கள் அறிஞர்களது கருத்துக்கள், சம்பவக் கற்கைகள், கள ஆய்வுகள், அனுபவங்கள், தரவுகள், சுட்டிகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்கள் மேற்கொள்வதைக் குறிக்கின்றது.

எழுந்தமானமான தீர்மானங்களை மேற்கொள்ளலானது குறித்த சந்தர்ப்பத்தில் குறித்த பிரச்சனையினை மறைப்பதற்காக, தனது சொந்த விருப்பின் அடிப்படையில், தனது தனிப்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், சில மறைமுக நோக்கங்கள் அடிப்படையில் தனிமனித விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் அந்த நேரத்தினைக் கடத்துவதற்காக தீர்மானங்கள் மேற்கொள்வதனைக் குறிக்கின்றது.

எழுந்தமானமான தீர்மானம் மேற்கொள்ளும் பொறிமுறையானது பயனுறுதி அற்றதும் நீடித்து நிலைக்க முடியாத ஒன்று என்பதும் உணரப்பட்டமையால் நிறுவன நலன் கருதிய தீர்மானம் மேற்கொள்ளலில் இம்முறை தற்போது குறைவடைந்து செல்கின்றமையைக் காணலாம்.

துறைசார் தீர்மானம் மேற்கொள்ளும் பொறிமுறை தொடர்ந்து வரவேற்கப் பெற்று வருகின்றது. இது இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றது.

1. அறிவு சார் நிபுணர்களின் அறிவு - அனுபவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்கள் மேற்கொள்ளல்
(Expert base Decision making)

2. குறித்த துறை சார்ந்த தரவுகள், அத்தரவுகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்கள், சுட்டிகள் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
(Evidence base Decision making)

இந்த இரண்டு முறைகளில் ஒன்றினையோ அல்லது இரண்டினையும் கலந்தோ பிரதான தீர்மானங்கள்-திட்டங்கள் - கொள்கைகள் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றின் அடிப்படையிலேயே செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.

ஆரம்ப காலங்களில் துறை சார்ந்த நிபுணர்களின் அறிவு அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் உலகின் அண்மைக் காலப் போக்கு தரவுகளின் அடிப்படையில் ஆதாரங்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்கின்ற நிலைக்குப் படிப்படியாக அதிகரித்து வருகின்றமையினைக் காணலாம்.

இந்த வகையில் தரவுகளின் அடிப்படையில் ஆதாரங்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ள முனைகின்ற போது ஆய்வு என்பது முதன்மை பெறுகின்றது.

ஆகவே ஆய்வு என்றால் என்ன என்று நோக்குகின்ற போது

- "ஆழமான தேடல்"
- "அறிவிற்கான தேடல்"
- "விசாரணை"
- "விஞ்ஞான ரீதியான விசாரிப்பு"
- "ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட தேடல்"
- "உண்மைகளைக் கண்டறிவதற்கான படிப்பு"
- "உண்மைகளை நிலைநாட்டுவதற்காகவும் புதிய முடிவுகளை எட்டுவதற்காகவும் செய்யப்படும் பொருட்கள் மற்றும் மூலங்கள் பற்றிய படிப்பு மற்றும் அவற்றின் மீதான கட்டமைக்கப்பட்ட விசாரிப்பு"

என்று பல்வேறு வரைவிலக்கணங்களைக் காணலாம்.

இவ்வாறான வரைவிலக்கணங்களை நோக்குகின்ற போது "எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு ஒன்றினைக் காண விளைகின்ற போது விஞ்ஞான ரீதியாக அப்பிரச்சினையினை அணுகி ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட பொறிமுறைக்கூடாக அப்பிரச்சினைக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்கான தீர்வுகளை முன்வைப்பதே பொருத்தமானதாகின்றது" என்பதனைப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இங்கு பிரச்சனை என்ற பதம் முதன்மை பெறுகின்றது. பிரச்சினை என்றால் என்ன? என்ற அடுத்த வினா தோன்றுகின்றது. இது குறித்து நோக்குகின்ற போது,

- பிரச்சினை என்பது ஒரு விடயம் எவ்வாறு இருக்கின்றது என்பதற்கும் அது எவ்வாறு இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பிற்கும் இடையிலான உணரப்பட்ட இடைவெளியாகும்.
- பிரச்சினை என்பது தற்கால நிலையிற்கும் விரும்பப்படும் எதிர்கால நோக்கிற்கும் இடையில் காணப்படும் ஒரு இடர்பாடு அல்லது தடை ஆகும்.
- பிரச்சினை என்பது தீர்க்கப்படக் கூடிய ஒன்று - எதிர்பார்ப்பினை அடைகின்ற போது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கின்றது.

எனவே பிரச்சினைக்கான தீர்வுகளைக் காண்பதற்கான திட்டமிடப்பட்ட விஞ்ஞான ரீதியான பொறிமுறையாக ஆய்வுகளைக் காண்கின்றோம்.

பொதுவாகப் பிரச்சினைகள் பல்வேறு வகையிலானதாகக் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிவதற்குப் பிரச்சினைகளின் தன்மையின் அடிப்படையில் பல்வேறு பொறிமுறைகளைக் கையாள வேண்டியேற்படுகின்றது. இவற்றின் அடிப்படையிலேயே ஆய்வுகள் வகைப்படுத்தப்படுகின்றன. பிரச்சினைகளின் அடிப்படையிலும், பிரச்சினைகளைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்படும் நுட்பங்களின் அடிப்படையிலும் பல்வேறு வகைகளான தேவைகளுக்கு ஏற்ப ஆய்வுகள் வகைப்படுத்தப்படுகின்றன.

இந்த வகையிலே வடக்கின் கல்விப் புலம் குறித்து நோக்குகின்ற போது எமது முக்கிய பிரச்சினையாக இன்று பலராலும் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற விடயம் க.பொ.த (சா.த) பரீட்சையில் மாணவர்களின் அடைவு சார்ந்ததாக உள்ளது. இது ஏன் ஒரு பிரச்சினையாகின்றது? க.பொ.த (உ.த) பரீட்சை, கணித ஒலிம்பியாட், இணைபாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றில் முன்னணியில் வடக்கு மாகாணம் இருந்தாலும்

க.பொ.த (சா.த) பரீட்சையில் மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடக்கு மாகாணம் கடந்த க.பொ.த (சா.த) பரீட்சையில் 8, 9 ஆம் இடங்களில் உள்ளது முன்னணியில் இல்லாமை பிரச்சினை - வடக்கு மாகாணம் க.பொ.த (சா.த) பரீட்சையில் முன்னணியில் நிற்றல் வேண்டும் என்பது எல்லோரதும் எதிர்பார்ப்பு. எனவே எதிர்பார்ப்பிற்கும் - தற்போது உள்ள நிலைக்குமான இடைவெளி பிரச்சினையாக உருப்பெற்றுள்ளது. எனவே இதற்கான காரணங்களும் அவற்றிற்காக முன்வைக்கப்படும் தீர்வுகளும் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு மட்டும் அமையாது ஆய்வுகள் மூலம் தரவுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டு தீர்வு காணல் அவசியம் என்பதனை இன்று கல்விச் சமூகம் உணர்ந்துள்ளது.

எனவே இதனடிப்படையில் வகுப்பறைகள் முதல் மாகாணக் கல்வி அமைச்சு வரை ஒவ்வொரு நிலையிலும் அவர்களது பிரச்சினைகளை மையமாகக் கொண்டு ஆய்வுகள் செய்வதற்கான அடித்தளம் தற்போது இடப்பட்டுள்ளது குறித்து இன்று கல்வியியலாளர்கள் தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளமையினைக் காணலாம். இதேபோல மத்திய கல்வி அமைச்சும் ஆய்வுகளை வலுப்படுத்துவதற்காக மத்திய கல்வி அமைச்சில் தனி ஒரு அலகினை நிறுவிப் பல செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இதேபோல எமது மாகாணக் கல்வித் திணைக்களமும் மாணவர்களின் வகுப்பறைப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வலயத்திலும் ஆகக் குறைந்தது 15 செயல்நிலை ஆய்வுகளையாவது செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இதேபோல கோட்ட, வலய ரீதியாகவும் ஆய்வுச் செயற்பாடுகள் வலுத்தப்படவுள்ளன.

மத்திய கல்வி அமைச்சுடன் இணைந்து தமிழ் மொழி மூலம் ஆய்வு முறையியல் தொடர்பான பயிற்சிகளை பல்கலைக்கழகங்களின் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் தேசியப் பாடசாலைகளில் ஆய்வுச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக மத்திய கல்வி அமைச்சுடன் இணைந்து பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2015 ஆம் ஆண்டு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டலில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களினால் 50 செயல்நிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு "திறவுகோல்" என்னும் தலைப்பில் தொகுப்பாக வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதேபோல கடந்த வருடம் 12 வலயங்களிலும் யாழ்ப்பாண விஞ்ஞான மன்றத்தின் வழிப்படுத்தலில் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக அதிபர்களுக்கான ஆய்வு தொடர்பான பயிற்சிகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகள், ஆய்வு மாநாடுகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆய்வுகளை வலுப்படுத்த விளைகின்ற போது தரவுகள் அடிப்படையாகின்றன. எனவே இதனைக் கருத்திற்கொண்டு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வடக்கு மாகாணக் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமைக்காக தனியான ஒரு இயங்கு வழி இணையத்தளம் உருவாக்கப்பட்டு இணைய வழித் தரவேற்றப் பொறிமுறைக்கூடாக வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி சார்ந்த அனைத்துத் தரவுகளும் தரவேற்றம் செய்யப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடுகின்றமையினையும் காணலாம். இதன் வளர்ச்சியாக பாடசாலைகள் மதிப்பீடு செய்யப்பட்டு புள்ளிகள் வழங்கப்படுகின்ற முறைமையும் இணைய வழி மூலம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மாகாணக் கல்வித் திணைக்கள

முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது. மூன்றாம் தவணை முதல் பாடசாலை மதிப்பீடு, பாடசாலைகளின் பண்புத் தரச்சுட்டி, உள்ளக, வெளியக மதிப்பீட்டுப் பண்புத் தரச் சுட்டிகள் தொடர்பான ஆய்வுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடக்கின் பிரச்சினைகளை விஞ் ஞான ரீதியான அணுகுமுறைகளின் ஊடாக - ஆய்வுகளின் ஊடாக அணுகி நவீன உலகின் போக்கில் நாமும் சென்று வெற்றி காண உங்கள் அனைவரினதும் பங்கு பற்றுதலை எதிர்பார்க்கின்றோம் - ஆய்வில் ஆர்வமுள்ள அனைவரும் இணைவோம் - தீர்வுகளை முன்வைப் போம்.

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்
க.மணிமார்பன் B.Sc.PGDE, MEd, MSc, SLEAS
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(முகாமைத்துவம்)
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

## 2016 டிசம்பர் க.பொ.த சாதாரணப் பரீட்சையில் எமது மாகாணத்திற்குட்பட்ட வலயங்களின் நிலைகள்

தேசிய மட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 306324 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். அவர் களில் 204307 பேர் க.பொ.த. உயர் தரத்திற்குத் தகுதி பெற்றனர். இது 69.68 வீதமாகும். 2.87 வீதமானோர் எல்லாப் பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளனர். 3.12 வீதமானோர் எல்லாப் பாடங்களிலும் W சித்தி பெற்றுள்ளனர்.

எமது வடக்கு மாகாணத்தில் 60.66 வீதமானோர் க.பொ.த உயர் தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். கடந்த வருடம் 60.38 வீதமானோர் தகுதி பெற்றனர். இம்முறை சித்தி வீதம் 0.28 வீதத்தால் அதிகரித் துள்ளது.

| வலயம் | சித்தி வீதம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 68.40 |
| தீவகம் | 51.86 |
| தென்மராட்சி | 58.57 |
| வடமராட்சி | 67.00 |
| கிளிநொச்சி | 49.31 |
| மன்னார் | 66.91 |
| மடு | 52.97 |
| வவுனியா தெற்கு | 66.16 |
| வவுனியா வடக்கு | 60.36 |
| முல்லைத்தீவு | 59.41 |
| துணுக்காய் | 51.73 |

# 2017 வடக்கு மாகாண பாடசாலைகளின் தடகளப் போட்டி மாணவர் சாதனைகள்

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் உடற்கல்வி மற்றும் விளையாட்டுத் துறைப் பிரிவு நடத்திய வடக்கு மாகாண பாடசாலைகள் மெய்வல்லுநர் (தட, கள) போட்டிகளில் யாழ்ப்பாணம் கல்வி வலயம் 650 புள்ளிகளைப் பெற்று ஒட்டுமொத்த சம்பியானானது.

பாடசாலைகள் மட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இரு பாலாரிலும் சம்பியன் பட்டங்களை சூடியது.

இவ் வருடப் போட்டிகளில் ஆண்களில் அதி சிறந்த மெய்வல்லுநராக மன்னார் புனித அன்னம்மாள் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.கலைவேந்தன் குறூஸ் (886 புள்ளிகள்) தெரிவானார்.

பெண்கள் பிரிவில் கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த பி.பவித்திரா (863 புள்ளிகள்) தெரிவானார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இந்த ஐந்து நாள் மெய்வல்லுநர் போட்டிகளில் 12 வலயங்களைச் சேர்ந்த 400 வரையான பாடசாலைகளிலிருந்து 2,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் 116 தட, கள நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

ஆரம்ப விழா முதல் பரிசளிப்பு வைபவத்துடனான முடிவு விழா வரை, இப் போட்டிகள் தேசிய தரத்திற்கு ஒப்பாக நடத்தப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியதாகும்.

மத்திய அரசு கல்வி அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய 12, 14, 16, 18, 20 ஆகிய வயதுப் பிரிவுகளில் இம்முறை போட்டிகள் நடத்தப்பட்டதுடன் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் இரு பாலாரிலும் சம்பியன் மெய்வல்லுநர்களுக்கும் சம்பியன் பாடசாலை அணிகளுக்கும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

தொடர் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவிலும் பெண்கள் பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வலயங்களுக்கு கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

வயதுப் பிரிவுகளில் சம்பியனானவர்களில் தட, கள ஆகிய இரண்டு வகையான நிகழ்ச்சிகளிலும் மன்னார் கௌரி அம்பாள் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த எஸ்.பிரியதர்சினி 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியனானமை விசேட அம்சமாகும்.

இவ் வருடப் போட்டிகள் மத்திய கல்வி அமைச்சின் ஆலோசனையின் பேரில் புதிய வயதுப் பிரிவுளின் கீழ் நடத்தப்பட்டதால் மாகாண சாதனைகள் எதுவும் பதியப்படவில்லை. எவ்வாறாயினும் சேர். ஜோன் டார்பட் கனிஷ்ட, சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாண மெய்வல்லுநர்களில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள்அடைவு மட்டத்தை கடந்துள்ளதுடன் பெரும்பாலானவர்கள் அடைவு மட்டத்தை அண்மித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு அமைய அகில இலங்கை பாடசாலைகள் தட, களப் போட்டிகளில் வடக்கு மாகாணத்திற்கு பதக்கங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றன.

வடக்கு மாகாண பாடசாலைகள் தட, களப் போட்டிளின் ஆரம்ப விழா, மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தலைமையில் நடைபெற்றதுடன் கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டுத்துறை, கலாசாரம் மற்றும் இளையோர் அலுவல்கள் அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

முடிவு விழா மற்றும் பரிசளிப்பு வைபவம் வடக்கு மாகாண கல்வி கலாசார, விளையாட்டுத்துறை மற்றும் இளையோர் அலுவல்கள் அமைச்சு செயலாளர் ஆர். ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றதுடன் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் பிரதம அதிதியாகவும் வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் ஏ.பத்திநாதன் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தனது குழு உறுப்பினர்களுடன் இணைந்து ஐந்து நாள் நிகழ்ச்சிகளையும் வெகு நேர்த்தியாக நடத்தியிருந்தார்.

### பாடசாலைகள் இறுதி நிலை

**ஆண்கள்**

| பாடசாலை | வலயம் | பு | நி |
|---|---|---|---|
| மகாஜனக் கல்லூரி | வலிகாமம் | 129 | சம்பியன் |
| யாழ.மத்திய கல்லூரி | யாழ்ப்பாணம் | 128 | 2 ஆம் இடம் |
| ஹாட்லிக் கல்லூரி | வடமராட்சி | 117 | 3 ஆம் இடம் |
| புனித அன்னம்மாள் ம.ம.வி | மன்னார் | 112 | 4 ஆம் இடம் |
| பற்றிமா ம.ம.வி | மன்னார் | 91 | 5 ஆம் இடம் |
| நெல்லிய மத்திய கல்லூரி | வடமராட்சி | 51 | 7 ஆம் இடம் |
| அரிப்பு றோ.க.த.க.பா | மன்னார் | 50 | 8 ஆம் இடம் |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | தென்மராட்சி | 48 | 9 ஆம் இடம் |
| சென்ற் ஜோன்ஸ் கல்லூரி | யாழ்ப்பாணம் | 44 | 10 ஆம் இடம் |

**பெண்கள்**

| பாடசாலை | வலயம் | பு | நி |
|---|---|---|---|
| மகாஜனக் கல்லூரி | வலிகாமம் | 110 | சம்பியன் |
| சுண்டிக்குளி மகளிர் | யாழ்ப்பாணம் | 104 | 2 ஆம் இடம் |
| அருணோதயா | வலிகாமம் | 65 | 3 ஆம் இடம் |
| கற்கிடந்தகுளம் றோ.க.த.க.பா | மன்னார் | 63 | 4 ஆம் இடம் |
| புதுக்குடியிருப்பு மத்திய க | முல்லைத்தீவு | 54 | 5 ஆம் இடம் |
| சாவகச்சேரி இந்து | தென்மராட்சி | 51 | 6 ஆம் இடம் |
| யாழ். இந்து மகளிர் | யாழ்ப்பாணம் | 41 | 7 ஆம் இடம் |
| கௌரிஅம்பாள் அ.த.க.பா | மன்னார் | 40 | 8 ஆம் இடம் |
| பிரான்பற்று கலைமகள் வி. | வலிகாமம் | 37 | 9 ஆம் இடம் |
| பளை மத்திய கல்லூரி | கிளிநொச்சி | 36 | 10 ஆம் இடம் |

### தொடர் ஓட்ட நிலைகள்

| ஆண்கள் | | | பெண்கள் | | |
|---|---|---|---|---|---|
| வலயம் | பு | நி | | பு | நி |
| மன்னார் | 76 | 1 | வலிகாமம் | 65 | 1 |
| யாழ்ப்பாணம் | 57 | 2 | யாழ்ப்பாணம் | 49 | 2 |
| வலிகாமம் | 31 | 3 | முல்லைத்தீவு | 30 | 3 |

### தட நிகழ்ச்சிகளில் அதி சிறந்த வெளிப்பாட்டாளர்கள்

**ஆண்கள்**

| | | |
|---|---|---|
| 12 இன் கீழ் | எஸ்.இந்துஜன் | (உடுத்துறை ம.வி) |
| 14 இன் கீழ் | எஸ். அண்ட்றூ ஷத்ரக் | (சென்ற் ஜோன்ஸ்) |
| 16 இன் கீழ் | எஸ்.கோபிநாத் | (யாழ்.மத்திய க) |
| 18 இன் கீழ் | ஏ. அபிக்ஷன் | (மன்னார் புனித அன்னம்மாள்) |
| 20 இன் கீழ் | ஏ.கலைவேந்தன் குறூஸ் | (மன்னார் புனித அன்னம்மாள்) |

**பெண்கள்**

| | | |
|---|---|---|
| 12 இன் கீழ் | ஏ.சிந்துஜா | (தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளையார் ம.வி |
| 14 இன் கீழ் | ரீ. அபிஷா மார்க் | (மன்னார் புனித அன்னம்மாள்) |
| 16 இன் கீழ் | ஜே.கிருஷாந்தினி | (பிரான்பற்று கலைமகள் ) |
| 18 இன் கீழ் | ஏ. மேரி தர்சிகா | (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) |
| 20 இன் கீழ் | எஸ். பிரியதர்சினி | (மன்னார் கௌரி அம்பாள் அ.த.க.பா) |

## கள நிகழ்ச்சிகளில் அதி சிறந்த வெளிப்பாட்டாளர்கள்

**ஆண்கள்**

| | | |
|---|---|---|
| 12 இன் கீழ் | பி.பிரணவன் | (கொக்குவில் இந்து) |
| 14 இன் கீழ் | எஸ். செந்தீசன் | (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்) |
| 16 இன் கீழ் | ஆர். மஹிந்தன் | (கைதடி, நுணாவில்) |
| 18 இன் கீழ் | ஏ.புவிதரன் | (சாவகச்சேரி இந்து) |
| 20 இன் கீழ் | குகஷாந்தன் | (விக்டோரியா) |

**பெண்கள்**

| | | |
|---|---|---|
| 12 இன் கீழ் | எஸ். யாழ்மதி | (மன்னார் கருங்கண்டல் றோ.க.த.க.பா) |
| 14 இன் கீழ் | ஜே. யதுஷனா | (மு.கொக்குத்தொடுவாய் அ.த.க.பா) |
| 16 இன் கீழ் | ஜோ.அபிஷா | (மன்னார் சிலாவத்துறை அ.த.க.பா) |
| 18 இன் கீழ் | பி. பவித்திரா | (கி.இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா) |
| 20 இன் கீழ் | எஸ். பிரியதர்சினி | (மன்னார் கௌரிஅம்பாள் அ.த.க.பா) |

## வயதுப் பிரிவுகளில் சம்பியன் பாடசாலைகள்

**ஆண்கள்**

| வ பி | பாடசாலை | வலயம் | பு |
|---|---|---|---|
| 12 இன் கீழ் | அரிப்பு றோ.க.த.பா | மன்னார் | 20 |
| | நெல்லியடி மத்திய கல்லூரி | வடமராட்சி | 20 |
| 14 இன் கீழ் | உடுப்பிட்டி அ.மி.க | வடமராட்சி | 43 |
| 16 இன் கீழ் | மகாஜன | வலிகாமம் | 54 |
| 18 இன் கீழ் | புனித அன்னம்மாள் ம.ம.வி | மன்னார் | 54 |
| | கொக்குவில் இந்து | யாழ்ப்பாணம் | 54 |
| 20 இன் கீழ் | யாழ்.மத்திய கல்லூரி | யாழ்ப்பாணம் | 60 |

**பெண்கள்**

| வபி | பாடசாலை | வலயம் | பு |
|---|---|---|---|
| 12 இன் கீழ் | மகாஜன | வலிகாமம் | 18 |
| 14 இன் கீழ் | புனித அன்னம்மாள் ம.ம.வி | மன்னார் | 27 |
| 16 இன் கீழ் | பிரான்பற்று கலைமகள் ம.வி | வலிகாமம் | 37 |
| 18 இன் கீழ் | சுண்டிக்குளி மகளிர் | யாழுப்பாணம் | 55 |
| 20 இன் கீழ் | சுண்டிக்குளி மகளிர் | யாழ்ப்பாணம் | 36 |

## வலயங்கள் இறுதி நிலை

| வலயம் | புள்ளி | நிலை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 650 | சம்பியன் |
| மன்னார் | 601 | 2 ம் இடம் |
| வலிகாமம் | 545 | 3 ம் இடம் |
| வடமராட்சி | 346 | 4 ம் இடம் |
| வவுனியா தெற்கு | 228 | 5 ம் இடம் |
| கிளிநொச்சி | 190 | 6 ம் இடம் |
| முல்லைத்தீவு | 188 | 7 ம் இடம் |
| தென்மராட்சி | 157 | 8 ம் இடம் |
| மடு | 130 | 9 ம் இடம் |
| துணுக்காய் | 109 | 10 ம் இடம் |
| தீவுகள் | 74 | 11 ம் இடம் |
| வவுனியா வடக்கு | 22 | 12 ம் இடம் |

## தட கள நிகழ்சிகளின் சம்பியன்கள்















## அகில இலங்கைத் தமிழ் மொழித்தின தேசிய நிலை போட்டிகளில் வடக்கின் பெறுபேறுகள் - 2017

| | பாடசாலை | பெயர் | | பிரிவு | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் | செல்வி . ஜெயசேகரன் | ஆக்கம் எழுத்து | 1 | இரண்டாம் |
| 2 | குமுழமுனை மகா வித்தியாலயம் | செல்வி. பகீரதன் லாசன்ஜா | கட்டுரை வரைதல் | 2 | முதலாம் |
| 3 | அருணோதயாக் கல்லூரி | செல்வி. உதயகுமார் கம்ஷாயினி | கட்டுரை வரைதல் | 3 | முதலாம் |
| 4 | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | செல்வி. ம. அமுதவிழி | கட்டுரை வரைதல் | 4 | இரண்டாம் |
| 6 | மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி | செல்வி. கனகேஸ்வரன் கவினா | இலக்கணப் பேச்சு | 4 | முதலாம் |
| 7 | நெல்லியடி மத்திய கல்லூரி | செல்வி. கௌதமன் சினேகா | இலக்கணப் பேச்சு | 6 | மூன்றாம் |
| 9 | சாவகச்சேரி இந்துக் கல்லூரி | செல்வி. ஜெயகணேஷன் ஜெயமதுரா | குறுநாடக | 4 | மூன்றாம் |
| 11 | வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம் | செல்வன். அந்தோனி அனுசாந்த் | கவிதை ஆக்கம் | 4 | முதலாம் |
| 12 | செட்டிகுளம் மகா வித்தியாலயம் | செல்வி. ம. ஆர்த்தனா | கவிதை ஆக்கம் | 5 | முதலாம் |
| 13 | மல்லாவி மகா வித்தியாலயம் | செல்வன். பாலசிங்கம் அஜிர்தன் | சிறுகதை ஆக்கம் | 4 | மூன்றாம் |
| 14 | கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி | செல்வி. சந்திரநாதன் காயத்ரி | சிறுகதை ஆக்கம் | 5 | முதலாம் |
| 15 | வள்ளிபுரம் கனிஸ்ட உயர்தர வித்தியாலயம் | செல்வன். வரதராஜ் தமிழ்வழுதி | வாசிப்பு | 1 | இரண்டாம் |
| 16 | கார்மேல் பாத்திமா கல்லூரி | செல்வி. கி. ஹர்ஷனா | வாசிப்பு | 2 | மூன்றாம் |
| 17 | யாழ் இந்து ஆரம்பக் கல்லூரி | செல்வி. சிறீதரன் ஆர்த்தி | ஆக்கத்திறன் | 1 | முதலாம் |
| 18 | இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை | செல்வன். பிரதீபன் சாயகி | பேச்சு | 1 | இரண்டாம் |
| 19 | புங்குடுதீவு மகா வித்தியாலயம் | செல்வன். கனிஸ்ரா சிவகுமார் | பேச்சு | 2 | இரண்டாம் |
| 20 | வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | செல்வி. இவோன் சேபா அன்ரனி ஜெயானந் | பேச்சு | 3 | இரண்டாம் |
| 21 | திருக்குடும்ப கன்னியர் மடம் | செல்வி. றெமிசியன் ஜெயபதி அனதில் சைனுகா | பேச்சு | 4 | மூன்றாம் |
| 22 | கிளிநொச்சி மகா வித்தியாலயம் | செல்வி. நகுலகுமார் அபிராமி | பேச்சு | 5 | முதலாம் |
| 23 | மாணிக்கவாசகர் வித்தியாலயம் | செல்வன். பிரதீபன் சரநிதன் | பாவோதல் | 1 | மூன்றாம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | செல்வன். சிவகுமாரன் பராந்தகன் | பாவோதல் | 2 | முதலாம் |
| 25 | பளை மத்திய கல்லூரி | செல்வன். கேதீஸ்வரன் கிசேரன் | பாவோதல் | 3 | மூன்றாம் |
| 26 | புனித சவேரியார் பெண்கள் கல்லூரி | செல்வி. செபஸ்ரியான் ஆன் றொஸ்லின் டயஸ் | பாவோதல் | 4 | இரண்டாம் |
| 27 | விக்ரோறியாக் கல்லூரி | செல்வி. சிவாஸ்கரன் பிரவீனா | இலக்கிய | 5 | இரண்டாம் |
| 29 | வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | செல்வி. ஹரிவண்ணன் ஹர்ணி | தனி இசை | 2 | மூன்றாம் |
| 30 | வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | செல்வி. பாலமுருகன் தரங்கினி | தனி இசை | 3 | முதலாம் |
| 31 | ஹாட்லிக் கல்லூரி | செல்வன். சிவனேஸ்வரன் ரமணன் | தனி இசை | 4 | முதலாம் |
| 32 | அருணோதயக் கல்லூரி | செல்வன். நித்தியானந்தம் சிவாஜன் | தனி இசை | 5 | முதலாம் |
| 33 | வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை | குழு | இசைகுழு | குழு 1 | முதலாம் |
| 34 | யாழ் இந்துக் கல்லூரி குழு | இசைகுழு | குழு | 11 | முதலாம் |
| 35 | வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை | செல்வி. தயாளன் விஷாலி | நடனம் தனி | 2 | இரண்டாம் |
| 36 | இந்து மகளிர் கல்லூரி | செல்வி. சோமசுந்தர சர்மா சுபானு | நடனம் தனி | 3 | முதலாம் |
| 37 | இந்து மகளிர் கல்லூரி | செல்வி. மோகனதாஸ் யுவலக்ஷி | நடனம் தனி | 4 | முதலாம் |
| 38 | கொக்குவில் இந்துக் கல்லூரி | செல்வி. விஜயகுமார் விதுஷா | நடனம் தனி | 5 | முதலாம் |
| 39 | கிளிநொச்சி மத்திய ம.வி | குழு | நடனம் குழு | குழு 1 | முதலாம் |
| 40 | இந்துமகளிர் கல்லூரி | குழு | நாட்டிய நாடகம் | | முதலாம் |
| 43 | யாழ்ப்பாணக் கல்லூரி | குழு | வில்லுப்பாட்டு | | முதலாம் |
| 44 | வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | குழு | விவாதம் | | மூன்றாம் |
| 48 | பரக்கும் மகா வித்தியாலயம் | செல்வி. செதுமி நிஹன்ஷா லியன பத்திரண | சிங். மாணவர் வி.பி | | முதலாம் |

## தென்மாகாண நட்புறவு






## தரம் – 2 பல்மட்டக் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கல்








சேவை முன்பயிற்சி நிறைவு



தென் மாகாண நட்புறவு



பஸ் அன்பளிப்பு





மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

Evergreen Printers